செய்தி வெளியீடு எண்: 600 நாள்: 31.08.2018

## செய்தி வெளியீடு

# எதிர்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலினின் பொருளற்ற புலம்புகளுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி பதிலறிக்கை

திமுகவின் ‘செயல் தலைவர்’ என்னும் பொறுப்பில் இதுவரை இருந்த மு.க.ஸ்டாலின், அந்த ‘செயலை’ இழந்து, திமுகவின் ‘தலைவர்’ என்ற பெயரை ஏற்றுக் கொண்ட நேரமோ என்னவோ, வகையற்ற வாதங்களை வார்த்தைகளாக்கி, பொருளற்ற புலம்பல்களுடன், நெறியற்ற அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

நேற்று அவர் வெளியிட்ட, ஸ்மார்ட் சிட்டி – சீர்மிகு நகரம் பற்றிய அறிக்கை, அதனை தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

மத்திய அரசு செயல்படுத்தும் சீர்மிகு நகரங்கள் திட்டம், நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் ஒரு முன்னோடித் திட்டம் என்றும், தமிழக வளர்ச்சிக்கும் உட்கட்டமைப்பிற்கும் மிக முக்கியமானதொரு திட்டம் என்றும், பாராட்டிக் கூறியுள்ள ஸ்டாலின், இத்திட்டத்தின் கீழ் அதிக அளவில் சீர்மிகு நகரங்கள் தேர்வு செய்யப்பட்டதில், 2வது மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்பதையும், அதை தமிழகத்திற்கு பெற்று தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதையும் கூற மறந்தது ஏன் என்ற கேள்வியை முன் வைக்க விரும்புகிறேன். தமிழகத்தின் மேம்பாடு குறித்த அக்கறை அவருக்கு இருப்பது உண்மை என்றால், இதற்காக புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அவர் நன்றி கூறியிருக்க வேண்டும்.

சீர்மிகு நகரங்கள் திட்டம் ஜூலை 2015ல் உருவாக்கப்பட்ட போதிலும், மத்திய அரசு இத்திட்டத்தை செயல்படுத்த உரிய விதிமுறைகளை வகுத்து, Smart City Board - சீர்மிகு நகர வாரியம் ஜூலை–2016ல் அமைக்கப்பட்டு திட்டத்தை செயல்படுத்த தொடங்கியது என்பதை அவர் அறிந்திட வேண்டும் என்பதனை சுட்டிக் காட்ட விழைகிறேன்.

சீர்மிகு நகரங்கள் அமைக்கும் பணிகளில் மாதங்கள் பல ஆகியும் எவ்வித முன்னேற்றமும் இல்லை என்று மு.க.ஸ்டாலின் வழிமொழிந்திருப்பது இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து அவர் சிறிதும் அறிந்திருக்கவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

இருப்பினும், கடந்த ஓராண்டில் தமிழகத்தில் உள்ள அனைத்து 11 சீர்மிகு நகரத் திட்டங்களிலும், இத்திட்டப் பணிகள் முழுவீச்சில் துவங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளது. இந்திய அளவில் முதல் 20 இடங்களில் தமிழ்நாட்டின் சீர்மிகு நகரங்கள் முக்கிய இடங்களை பெற்றுள்ளதே இதற்கு சான்றாகும்.

சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தில், ரூ.1000 கோடி மதிப்பீட்டிற்கு 33 திட்டங்கள் எடுக்கப்பட்டு, 20 பணிகள் ரூ.310 கோடியில் முடிக்கப்பட்டும், நடைபெற்றும் வருகிறது. தியாகராய நகரில் அடுக்குமாடி வாகன நிறுத்தம், பாதசாரிகள் நடைவளாகம், நவீனபடுத்தப்பட்ட பூங்காக்கள், வகுப்பறைகள், எல்.இ.டி. விளக்குகள், மிதிவண்டி பாதைகள், மழைநீர் வடிகால் சீரமைப்பு, பாதசாரிகளுக்கான நடைபாதைகள் ஆகியவை நடைபெற்றுவருகிறது.

மேலும், நவீனமுறையில் நகரம் முழுமைக்கும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு திட்டம், வாகனங்கள் நிறுத்தும் மேலாண்மைத் திட்டம், பகிர்மான முறையில் மிதிவண்டி உபயோகப்படுத்தும் திட்டம், மழைநீர் சேகரிப்பதற்காக 52 குளங்களை தூர்வாரி சீரமைக்கும் திட்டம், 15 கோயில் குளங்களை சீரமைக்கும் திட்டம், வெள்ள பாதிப்பை நீக்குவதற்காக இணைப்பு மழைநீர் வடிகால்கள் கட்டும் திட்டம் மற்றும் புதிய பாலங்கள் அமைக்கும் திட்டம் போன்ற 12 பல்வேறு திட்டங்கள் ரூ.500 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி நிலை முதல் பணி தொடங்கும் நிலை வரை உள்ளது.

இவற்றில், நவீன முறையில் நகரம் முழுமைக்கும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம் (Integrated Command and Control Centre) குறித்து தான் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியிருக்கிறார்.

சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம், சென்னை மாநகரில் அமைப்பதற்கான திட்டம் தீட்டப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியால் திறந்த வெளி மின்னணு ஒப்பந்தப்புள்ளி 22.02.2018 அன்று கோரப்பட்டது. இதற்கான ஒப்பந்தப்புள்ளி கடைசி நாளாக 28.03.2018 அன்று நிர்ணயிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தப்புள்ளி, தொழில்நுட்பம் மற்றும் விலைப்புள்ளி ஆகிய இரண்டையும் தனித்தனியாக ஆராயும் ஒப்பந்தப்புள்ளி ஆகும்.

அதன்படி, தொழில்நுட்ப தகுதிக்கான கூட்டம், 13.03.2018 அன்று நடத்தப்பட்டது. இதில், சுமார் 50க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டதில், ஒப்பந்த நிறுவனங்கள் எழுப்பிய தொழில்நுட்பம் சார்ந்த அனைத்து கேள்விகளுக்கும் மின்னஞ்சல் மூலமாக பதில் வழங்கப்பட்டது.

இதன் பின்னர், தொழில்நுட்பத் தகுதி பெற்ற மூன்று நிறுவனங்களான எல் & டி நிறுவனம், மெட்ராஸ் செக்யூரிடி பிரிண்டர்ஸ் நிறுவனம் மற்றும் கெல்ட்ரான் நிறுவனத்திற்கு அழைப்புகள் கொடுக்கப்பட்டு, **4.6.2018** அன்று இந்நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி செயல்படுத்த வேண்டிய தொழில்நுட்ப அம்சங்கள் அனைத்தும், ரிப்பன் மாளிகையில் காட்சிப்படுத்தி (Proof of Concept), அவை தொழில் நுட்பக் குழுவின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு, அதனடிப்படையில் இந்நிறுவனங்களுக்கு மதிப்பெண்கள் அளிக்கப்பட்டது.

இதன் பின்னரே, விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. இந்த, தொழில் நுட்பம் மற்றும் விலைப்புள்ளிகளின் அடிப்படையில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர் கெல்ட்ரான் நிறுவனத்திற்கு இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டது. திருவாளர்கள் கெல்ட்ரான் நிறுவனம் கேரள மாநில அரசு சார்ந்த நிறுவனமாகும். அனைத்து தகுதிகளையும் ஆராய்ந்த பின்னரே இந்த ஒப்பந்தப்புள்ளி கெல்ட்ரான் நிறுனத்திற்கு வழங்கப்பட்டது.

கெல்ட்ரான் நிறுவனம், கடந்த **30** ஆண்டுகளாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (ISRO), தேவையான மின்னணுத் தொழில்நுட்பங்களை வழங்கி வருகிறது. மேலும், கொல்கத்தா மெட்ரோ இரயில் திட்டம், கேரள மாநில காவல்துறை, புனே மாநகராட்சி முழுமைக்குமான கண்காணிப்பு மின்னணுத் தொழில்நுட்ப மற்றும் இயந்திரங்களையும், இந்திய கடற்படைக்குத் தேவையான மின்னணுத் தொழில்நுட்பங்களையும் வழங்கியுள்ளது.

இத்தகைய சிறப்புகளைப் பெற்ற கெல்ட்ரான் நிறுவனம் பன்முக தன்மை பெற்ற ACE Tech, நிறுவனத்துடன் ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்குட்பட்டு, கூட்டமைப்பு ஏற்படுத்தி, இந்த ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டது. இந்த கூட்டமைப்பில், கெல்ட்ரான் நிறுவனமே முக்கிய பங்கு நிறுவனமாகும். இதையெல்லாம் அறிந்து கொள்ளாமல், இது குறித்த **எந்த உண்மையையும் தெரிந்து கொள்ளாமல், மு.க.ஸ்டாலின், சிறப்பாக செயல்பட்டு வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் மீது குறை கூற வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் வழக்கம் போல் வேண்டுமென்றே காழ்ப்புணர்ச்சியோடு குற்றம் சுமத்தி உள்ளார்.**

**தன்னுடைய இந்த கற்பனைத் திரைக்கதைக்கு வலு சேர்த்திட ஐஏஎஸ் அதிகாரியின் மாற்றத்தை துணை கொண்டிருக்கிறார் மு.க.ஸ்டாலின். நிர்வாக காரணங்களால் செய்யப்பட்ட ஒரு மாறுதலை, தன்னுடைய பொய் அறிக்கைக்கு சாட்சியமாக எடுத்துக் காட்டுகின்ற ஸ்டாலின் செயல் மிகவும் தரக் குறைவானது.**

பெருநகர சென்னை மாநகராட்சி தவிர பிற மாநகராட்சிகளில் உள்ள **10** சீர்மிகு நகரங்களில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் ஏற்படுத்தும்

ஒப்பந்தப்புள்ளிக்கு, திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில், மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த தொகை ஒப்பந்தப்புள்ளி கொடுத்த L&T நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி (L1) ஏற்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு ஒப்பந்தமும் கையொப்பமிடப்பட்டுள்ளது. அதனை எதித்து L2 நிறுவனமான கேரளா மாநில அரசின் கெல்ட்ரான் நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அதில் 03.09.2018 வரை இருக்கின்ற நிலையே நீடிக்கவேண்டுமென (Status Quo) உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. இந்நிலையில் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு பற்றி செய்தித்தாள்களில் அறிக்கைவிடுவது, நீதிமன்ற அவமதிப்பிற்கு உள்ளாகும் என்ற அடிப்படையைக் கூட அறியாமல் அறிக்கை வெளியிட்டுள்ள மு.க.ஸ்டாலினின் செயல்பாடு சிறுபிள்ளைத்தனமானதாகும்.

ஒளிவு மறைவற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் தேர்வு செய்யப்பட்ட, கேரள மாநில அரசு சார்ந்த நிறுவனத்துடன் இணைந்து செயல்படும் நிறுவனத்திற்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லாத நிலையில், பினாமி நிறுவனமென என குற்றஞ்சாட்டியுள்ளது மிகுந்த உள்நோக்கம் கொண்டதாகும்.

**அப்படியெனில், மு.க.ஸ்டாலின் அவர்கள் குடும்ப உறவினர்கள் உள்ளடக்கிய தொழில் நிறுவனங்கள் அனைத்தும் எதிர்கட்சித் தலைவரின் பினாமி நிறுவனங்கள் என குற்றம் சுமத்தினால் ஏற்றுக்கொள்ளத் தயாரா ?**

அதே அறிக்கையில், உண்மைக்கு முற்றிலும் புறம்பான இன்னொரு குற்றச்சாட்டையும் மு.க.ஸ்டாலின் முன் வைத்திருக்கிறார்.

லஞ்ச ஊழல் என்னும் புற்று நோய்க்கு மறு பெயராக விளங்குவது திமுக தான் என்பதை தமிழக மக்கள் மிக நன்றாக அறிவார்கள். ஆனால், இதை தனது தந்தையின் நிழலில் குறுக்கு வழியில் வாரிசு அடிப்படையில் கட்சியிலும், ஆட்சியிலும் பல்வேறு பதவிகளை அனுபவித்ததை முற்றிலுமாக மறந்து விட்டு, புதிதாக தலைவர் அவதாரம் எடுத்துள்ள மு.க.ஸ்டாலின் டெண்டர் முறைகேடுகள் தொற்றுநோய் போல் பரவி பாதிப்புகள் உண்டாக்கி வருவதாக சொல்லி இருக்கிறார். **தி.மு.க. ஆட்சி காலத்தில்தான் மு.க.ஸ்டாலின் அவர்களால் ஒப்பந்தப்புள்ளி நடைமுறையில் Package System முதன்முதலாக கடைபிடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை தனது வசதிக்காக மறந்து விட்டார் போலும்.**

எல்இடி விளக்குகள் பொருத்துவதற்கான ஒப்பந்தங்கள் அமைச்சரின் பினாமிகளுக்கே வழங்கப்பட வேண்டும் என்று எழுதப்படாத உத்திரவு போடப்பட்டதாக செய்திகள் வருகின்றன என்று "எவரோ கேட்டதை யாரோ சொன்னார்கள், யாரோ சொன்னதை எவரோ கேட்டார்கள்" என்று சில மடச் சாம்பிராணிகள் சொன்ன கதையாக தனது அறிக்கையில் கூறியிருக்கிறார் ஸ்டாலின்.

திமுக ஆட்சிக் காலத்தில், ஒப்பந்ததாரர்களுக்கு டெண்டர் கொடுத்தார்கள், அதாவது, திமுகவினர் தாங்கள் விரும்பியவர்களுக்கு, தங்களது விருப்பப்படி நடப்பவர்களுக்கு டெண்டர்கள் கொடுத்தார்கள்.

மே மாதம், 2007ம் ஆண்டிலேயே மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையை அமல்படுத்தலாம் என திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி விதிகள்—2000ம் ஆண்டிற்கு திருத்தம் வெளியிடப்பட்டு, தங்கள் சுயலாபத்திற்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளை அமல்படுத்தாமல் திமுக ஆட்சியால் விஞ்ஞானபூர்வ ஊழலுக்கு வழிவகுத்ததை மாண்புமிகு அம்மா அவர்கள் **மே, 2011ல் முதல்வராகப் பொறுப்பேற்ற பின்னர் தான் மின்னணு ஒப்பந்தப்புள்ளி e-tender திட்டத்தை முழுமையாக அமல்படுத்தினார்கள் என்பதனைக் அழுத்தமாக கோடிட்டு காட்ட விழைகின்றேன்.**

எல்இடி விளக்குகளை பொறுத்தமட்டில், தமிழகத்தில் நகர்ப்புரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் பொதுமக்களின் நலன் கருதியும், பெண்களின் பாதுகாப்பு கருதியும், முன்பு பயன்பாட்டில் இருந்த வெளிச்சம் குறைந்த சோடியம் மற்றும் மெர்குரி ஆவி விளக்குகளுக்கு பதிலாக, ஒரு புதிய முயற்சியாக மின்சார செலவினைக் குறைத்திடவும், நீடித்த செயல்திறன் மற்றும் மின்சிக்கனம் வாய்ந்த LED விளக்குகள் பொருத்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 2014ம் ஆண்டில் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, எல்இடி விளக்குகள் பொருத்தப்பட்டதன் விளைவாக, இது வரையில், ஊரகப் பகுதிகளில் மட்டும் 170 கோடி ரூபாயும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், 81 கோடியே 77 இலட்சம் ரூபாயும் மின் சேமிப்பாக பெறப்பட்டுள்ளது. LED விளக்குகளாக மாற்றி அமைக்கப்பட்டதன் காரணமாக, பெருநகர சென்னை மாநகராட்சி. பிற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் 45—50%, வரையிலும், ஊரகப் பகுதிகளில் 45% வரையிலும் மின்சாரம் சேமிக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

தெருவிளக்குகளை எல்இடி விளக்குகளாக மாற்றி அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள், வெளிப்படையான ஒப்பந்த விதிமுறைகளைப் பின்பற்றியே இறுதி செய்யப்படுகின்றது.

எல்இடி விளக்குகளை வழங்க முன்வரும் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் பங்கு பெறுவதற்கு முன்னதாக, இந்த ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவது குறித்து நாளிதழ்களிலும், இணையதளத்தின் மூலம் இ—டெண்டரிலும், விளம்பரம் செய்து, அனைத்து எல்இடி விளக்கு உற்பத்தியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுகின்றன.

அதற்கு முன்னதாக அந்நிறுவனங்களிடமிருந்து வெளிப்படையான மாதிரிகளை பெற்று, பின்னர் அதை பெருநகர சென்னை மாநகராட்சி பொறியாளர்களைக் கொண்டு ஐஎஸ்ஓ தர சான்றிதழ் பெற்ற சென்னை மாநகராட்சி ஆய்வுக் கூடத்தில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. இவ்வாறு தரப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, தரம் உறுதி செய்யப்பட்ட பிறகே அந்நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளியில் பங்கு கொள்ள முடியும்.

இவ்வாறு தரம் உறுதி செய்யப்பட்ட நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் ஆய்வு செய்யப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளித் தொகை அளித்த நிறுவனங்களுக்கே ஒப்பந்தப்புள்ளிகள் நேர் செய்யப்படுகின்றன.

LED ஒப்பந்தப்புள்ளியில், பிலிப்ஸ், கிராம்ப்டன், ஸ்ரேட்டர், பஜாஜ், சூரியா, ஆஸ்ரம், ஹெவல்ஸ் போன்ற முன்னணி உற்பத்தியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tender) மூலம் பங்குபெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த 40க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மூலமே இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே, இதில் எந்த முறைகேடும் நடைபெறவில்லை.

இவ்வாறு ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்ட நிறுவனம், தான் வழங்கிய விளக்குகளுக்கு 7 வருட உத்திரவாதம் அளிக்கிறது. இந்த விளக்குகள் பொருத்தியபின் எரியவில்லை என்றாலோ, வேறு வகையில் பழுது ஏற்பட்டாலோ, அதனை சரிசெய்ய முடியாத நிலையில், அதற்கான தொகையில் பாதியை அந்த நிறுவனம் திரும்ப வழங்க வேண்டும் என்பது ஒப்பந்தப்புள்ளி விதிகளில் ஒன்றாகும். இதன் மூலம் இத்தெருவிளக்குகளை சரியான முறையில் பராமரிக்க வழிவகை செய்ய உறுதி செய்யப்பட்டுள்ளது.

**ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகி, விசாரணை கமிஷன் எதிர்கொண்டு, விஞ்ஞான ரீதியாக ஊழல் செய்தவர்கள் என்று பெயர் வாங்கியது திமுக அரசு தான். இந்தியாவிலேயே ஊழலுக்காக ஆட்சிக் கலைப்புக்கு உள்ளானதும் திமுக ஆட்சி தான் என்பதை நாடு நன்கு அறியும்.**

வித்தை கற்றவன் போல ஆரம்பித்து, தட்டுத்தடுமாறி தவிதவித்து, தன்னுடைய சொத்தை அறிக்கையை முடித்திருக்கும் மு.க.ஸ்டாலின், விசாரணை நடத்தி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருக்கின்றார்.

கொள்ளை அடித்த கள்வன் தன்னைப் பிடிக்க வரும் ஊராரிடமிருந்து தப்பிக்க திருடன், திருடன் என்று கூறியபடியே ஒடுவது போல, தன்னுடைய நிர்வாகத் திறனற்ற கையாலாகத்தனத்தையும், லஞ்ச ஊழலில் திளைத்த, திமுகவின் தீய செயல்பாட்டை மறைக்கவும் இத்தகைய அறிக்கையை ஸ்டாலின் வெளியிட்டிருக்கிறார்.

**எதிர்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த காலங்களில் சென்னை மாநகராட்சி மேயராகவும் உள்ளாட்சித்துறை அமைச்சராகவும் மற்றும் துணை முதல்வராகவும் இருந்து பணியாற்றிய போது உள்ளாட்சித்துறையில் செயல்படுத்திய வளர்ச்சிப்பணிகள் மற்றும் மக்கள் நல திட்டங்கள் குறித்தும்,** மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் **ஏழை விவசாய குடும்பத்தைச் சார்ந்த கழகத்தின் கடைக்கோடி தொண்டனான என் மீது நம்பிக்கை வைத்து உள்ளாட்சித்துறை அமைச்சராக என்னை நியமித்தபின்பு இத்துறையில் ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகத்துறை மற்றும் மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உட்பட உள்ளாட்சித் துறையில் நிகழ்த்தியுள்ள அரும்பெரும் சாதனைகள் குறித்து எதிர்கட்சித் தலைவர் விரும்பினால் மக்கள் மன்றத்தில் தனி மேடை அமைத்தோ? அல்லது சட்டமன்றத்திலோ விவாதிக்க நான் எந்த நேரத்திலும் தயாராக உள்ளேன். நீங்கள் தயாரா?** எங்களுடைய சாதனை விவரத்தை நாடே அறியும்.

தி.மு.க ஆட்சியின் அவலட்சணத்தை சொல்ல ஆரம்பித்தால், அதற்கு முடிவே இருக்காது.

- **இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு துரோகம் இழைத்தது**
- **கச்சத்தீவை இலங்கைக்கு தாரைவார்த்தது**
- **வீராணம் குடிநீர் திட்ட ஊழல்**
- **2G ஸ்பெக்ட்ரம் ஊழல்**
- **ரூ.200 கோடி கலைஞர் டி.வி. ஊழல்**
- **அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி தொலைத்தொடர்பு ஊழல்**
- **காவேரி மற்றும் முல்லைப் பெரியாறு பிரச்சனைகளில் தமிழகத்தின் நலனை அடகுவைத்தது.**
- **தமிழகத்தின் நலன் மறந்து தனது குடும்ப உறுப்பினர்களுக்கு மத்திய அரசில் முக்கிய இலாக்காக்களை பெற டில்லிக்கு காவடி தூக்கியது.**

தி.மு.க. ஆட்சி காலத்தில் சென்னை மாநகரில் பாலங்கள் கட்ட, சரியாக திட்டமிடப்படாமல் போக்குவரத்து பிரச்சனைகளுக்கு தீர்வு தராத தேவையற்ற **9 சிறு மேம்பாலங்கள் ரூ.94.50 கோடி மதிப்பீட்டில் பினாமிகளுக்காக சந்தை மதிப்பைவிட கூடுதல் மதிப்பீட்டில்** அவசரகதியில் கட்டி முடிக்கப்பட்டது.

**மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டு வரப்பட்ட ஒக்கேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் நிதி ஆதாரம் உறுதிசெய்யப்பட்ட நிலையில் ஆட்சிமாற்றத்தின் காரணமாக தி.மு.க. ஆட்சிகாலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டம் என தவறாக பொய் பிரச்சாரம் செய்து சுயதம்பட்டம் செய்துகொள்கிறீர்கள்.**

**நெஞ்சிலே உரத்தோடும், நேர்மைத் திறத்தோடும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் அம்மா வழியில் சிறப்பாக பொற்கால ஆட்சி நடைபெற்று வருகிறது.**

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். ஆனால், அம்மா அவர்களின் ஆட்சித் தனிச் சிறப்பை விளக்க **சாலைகள் அமைப்பு, குடிநீர் மழைநீர் வடிகால் கட்டமைப்பு, மழை வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகள்** என நான்கு அம்சங்களையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம்.

சென்னை மாநகரப் பகுதிகளில் முதல் கட்டமாக உலக வங்கி நிதி உதவியுடன் 405 கி.மீ நீளத்திற்கு மழை நீர் வடிகால் பணிகள் சுமார் ரூ.1100 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் யாவும் மிக தரமாக நடைபெறுவதை நேரிலும் மற்றும் தமிழக தலைமை செயலாளருக்கு கடிதம் வாயிலாகவும் உலக வங்கி பாராட்டுத் தெரிவித்துள்ளது. இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசிற்கு உலக வங்கியால் தரப்பட்ட ஒரு நற்சான்றாகும்.

மேலும், **142 ஆண்டுகள் காணாத வறட்சி, 100 ஆண்டுகள் காணாத பெருமழைவெள்ளம், வர்தா புயல், ஒகி புயல்** ஆகிய இயற்கை பேரிடர் காலங்களில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த போர்க்கால நடவடிக்கைகளின் காரணமாக பேரிடர் பாதித்த பகுதிவாழ் மக்கள் தங்கள் துயரங்களிலிருந்து மீண்டு இயல்பு நிலைக்கு திரும்பினர். **இந்நிகழ்வுகளில் வல்லரசு நாடுகளே வியக்கும் வண்ணம் மாண்புமிகு அம்மாவின் அரசு சாதனைகளை நிகழ்த்தியுள்ளது என்பது நாடறிந்த உண்மையாகும்.**

**கடந்த தி.மு.க அரசின் 5 ஆண்டுகால ஆட்சியில் எந்தவித ஆக்கப்பூர்வமான திட்டங்களும் செயல்படுத்தப்படாத நிலையில்,** மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அவர்களின் அரசு **உள்ளாட்சி, வேளாண்மை, சுகாதாரம், கல்வி, மின்சாரம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் அகில இந்திய அளவில் முதன்மை மாநிலமாக திகழ்வதை பொறுத்துக்கொள்ள முடியாமல் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் கூறி அவதூறு பரப்பி வருகின்றார். இத்தகைய அவதூறுகளை தமிழக மக்கள் எந்த காலத்திலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.**

மாண்புமிகு அம்மா அரசின் மீது மாறாத பற்றும், முழு நம்பிக்கையும் வைத்துள்ள தமிழக மக்கள், இவருக்கு வருகின்ற தேர்தல்களில் தக்கபாடம் புகட்டுவார்கள்.

**எஸ்.பி.வேலுமணி**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**